Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.301/2022

Dated 12-01-2026

Deposition of witness for : PW 19

அரசு தரப்பு 19 வது சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு திரு.அ.ஏகாம்பரம், கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அனிதாகிரேஸி | வயது | : | 49 |
| தந்தை பெயர் | : | ஹரி ஞானராஜ் | தாலுக்கா | : | திருச்சி |
| கிராமம் | : | திருச்சி | தொழில் | : | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1,2 present**

Ld. D. **Counsel Present**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1) 29.4.2022 அன்று சாட்சிகள் சந்திரசேகரன், அர்சுணன், புஸ்பவள்ளி ஆகியோர்களிடம் ரகசிய வாக்குமூலம் பெற பாபநாசம் நீதித்துறை நடுவர் அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டு 2.5.2022 அன்று த.கா. சரோஜனி மூலம் மேற்படி நபர்களை நீதிமன்றத்தில்

ஆஜர் செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது- அந்த வேண்டுகோள் கடிதம் இதுதான். அது அ.சா.ஆ.19 ஆகும்.

2) வழக்கில் கைப்பற்றப்பட்ட தடய பொருட்களான சம்பவ இடத்தில் இருந்து எடுக்கப்பட்ட ரத்தம் தோய்ந்த மண் சிறிதளவு, ரத்தம் தோயாத மண் சிறிதளவு ஆகியவற்றை மகஜரில் சாட்சிகள் யோகேஸ், சிவராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றினேன்.அந்த கைப்பற்றுகை மகஜர் அ.சா.ஆ.20 ஆகும். கைப்பற்றிய தடய பொருளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 அ.சா.ஆ.21 ஆகும்.

3) மேலும் சுமார் 26 செ.மீ. நீளமுள்ள வளைந்த வெட்டு பாகமும் சுமார் 40 செ.மீ. நீளமுள்ள ரப்பர் டியூபால் சுற்றப்பட்ட கைப்பிடி கொண்ட மொத்தம் 40 செ.மீ.நீளமுள்ள அருவாள் ஒன்றையும், பிரவுன் கலரில் கட்டம்போட்ட ரத்தக்கரையுடன் கூடிய கைலி ஒன்றும், ஊதா கருப்பு மற்றும் வெள்ளை கலர் கொண்ட ரத்தம் தோய்ந்த கைலி ஒன்றும் ஆகியவற்றை மகஜர் மூலம் கைப்பற்றினேன். மேற்படி ஊதா கருப்பு மற்றும் வெள்ளை கலர் கொண்ட ரத்தம் தோய்ந்த கைலியை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 அ.சா.ஆ.22 ஆகும்.

4) நீதிமன்றம் மூலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு காவலர் கபிலன் மூலம் 27.6.2022 மேற்படி தடய பொருட்களை பகுப்பாய்வுக்காக அனுப்பி வைத்தேன். ி

5) பின்னர் வழக்கின் சாட்சிகளான சந்திரசேகர், புஸ்பவள்ளி,. அர்சுணன், பிரபு, சுப்பிரமணியன் , விஜய், யோகேஸ், சிவராஜ், வடிவேல், அறிவானந்தம், சந்திரசேகரன்,

செந்தில்குமார், சேகர், கார்த்திகேயன், மணிக்கண்டன், முருகேசன், சரவணபவ ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

6) 20.4.2022 அன்று காவலர் யோகேந்திரன் மூலம் வழக்கின் முதல் தகவல் அறிக்கை துரித தபால் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

7) இறந்துபோன நபரான பிச்சையின் பிரேத பரிசோதனை யின் போது த.கா. பாலமுருகன் உடன் இருந்தும் பிரேதத்தின் மீது எடுக்கப்பட்ட ஊதா கருப்பு மற்றும் வெள்ளை கலர் கொண்ட ரத்தம் தோய்ந்த கைலியை பெற்று தனி அறிக்கையுடன் சமர்ப்பித்தார். பின்னர் பிரேத பரிசோதனை முடித்து மருத்துவரிடம் இருந்து இறந்தவரின் உடல் உள்உறுப்புகளை பெற்று தஞ்சாவூர் ரசாயன பகுப்பாய்வுக்காக கொடுக்கப்பட்டது.

8) மேலும் வழக்கின் சாட்சிகளான காவலர் யோகேந்திரன், காவலர் சவுந்தரராஜன், த.கா. பாலமுருகன், த.கா. சரோஜினி, காவலர் கபிலன் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன.

9) இறந்துபோன பிச்சை என்பவரின் உடலை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் ே◌ஹமாவதி அவர்களை விசாரித்து அவர்களிடம் அறிக்கை பெற்றும், உடல் கூறுகளை பரிசோதனை செய்து சான்று வழங்கிய உதவி இயக்குநர் திரு சேதுராமன்அவர்களையும், இவ்வழக்கின் தடய பொருட்களை ஆய்வு செய்த அறிவியல் அலுவலர் டாக்டர் சிவகுமார் அவர்களையும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் முருகேசன் அவர்களையும் தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த உயிரியியல்

ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.23, குருதிநீரியியல் ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.24 ஆகும்.

10) இத்துடன் என் புலன் விசாரணை முடித்து 21.7.2022 அன்று எதிரி ரமேஷ் என்பவர் மீது 294 (பி) 302 இ.த.ச படியும் மற்றொரு எதிரியான ராஜலட்சுமி என்பவர் மீது 294 (பி) , 109, 302 இ.த.ச படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

நான் விசாரித்தபோது அ.சா.2 அர்சுணன், அ.சா.3 புஸ்பவள்ளி, அ.சா.11 முருகேசன், அ.சா.12 சரவணபவ ஆகியோர்கள் கு.வி.மு.ச 161 வாக்குமூலத்தில் சொல்லி உள்ளபடியே என்னிடமும் சொன்னார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) புகார் யாரால் எழுதப்பட்டது என்று விசாரணை செய்தீர்களா என்றால் நான் விசாரிக்கவில்லை.

2) சாட்சி சந்திரசேகரனிடம் நான் நேரடியாக புகார் வாங்கினேனா என்றால் இல்லை.

3) அ.சா.1 சந்திரசேகர் என்னிடம் ஒரு புகார் கொடுக்கப்பட்டு அந்த புகார் வழக்கிற்கு தகுந்தாற்போல் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4)கபிஸ்தலம் காவல்நிலையத்திற்கும் பாபநாசம் நீதிமன்றத்திற்கும் சுமார் 5 கி.மீ. தூரம் இருக்கும்.

5) எங்கள் காவல்நிலையத்தில் இருந்து நீதிமன்ற பணிக்கு ஒரு காவலர் தினமும் சென்று வருவார் என்றால் சரிதான்.

6) இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை 21.4.2022 அன்றுமதியம் 12.15 மணிக்கு

நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அன்றைய தினம் பாபாநாசம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இல்லாத காரணத்தினால் பொறுப்பு நீதிபதியாகிய திருவிடைமருதூர் நீதிபதியிடம் கொடுக்கப்பட்டது.

7) எங்கள் காவல்நிலையத்திற்கும் திருவிடைமருதூர் நீதிமன்றத்திற்கும் சுமார் 30 கி.மீ. தூரம் இருக்கும்.

8) காவலர் யோகேந்திரன் என்பவரிடம் 20.4.2022 அன்று இரவு 21.00 மணியளவில் அச்சுமுதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்தில் கொண்டு சேர்க்கும்படி கொடுத்து அனுப்பினேன். 21.4.2022 அன்று மதியம் 12.00 மணிக்கு சுமார் 15 மணிநேரம் காலதாமதாக நீதிமன்றத்திற்கு போய் இருப்பதால் அந்த காலதாமதத்தை பற்றி யோகேந்திரன் என்ற காவலரிடம் நான் தனி வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. காலதாமதமாக ஏன் கொடுத்தீர்கள் என்று நான் விசாரித்தேன்.

9) பிரேத விசாரணை அறிக்கை காலம் எண்.4ல் கொலையுண்ட நபரை கொலைக்கு முன்பாக இறுதியாக உயிருடன் யார் பார்த்தார்கள் என்ற இடத்தில் சந்திரசேகர் என்ற பெயரை தவிர அர்ச்சுணன், புஸ்பவள்ளி ஆகிய இருவரும் பார்த்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதே அறிக்கையில் காலம் எண்.15ல் பிரேத விசாரணை நேரம் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10) இறந்த நபரின் உடலை உடற்கூராய்வு செய்வதற்குரிய வேண்டுகோள் கடிதத்தை என்ன தேதியில் எத்தனை மணிக்கு கொடுத்து அனுப்பினீர்கள் என்றால் 21.4.2022 அன்று

காலை 10.00 த.கா. பாலமுருகன் என்பவர் மூலம் பாபநாசம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன்.

11). சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை எந்த தேதியில் எத்தனை மணிக்கு தயார் செய்தீர்கள் என்றால் 20.4.2022 அன்று இரவு 1.40 மணிக்கு தயார் செய்தேன்.

12) சாட்சி சந்திரசேகரனை எத்தனை மணிக்கு விசாரித்து வாக்குமூலம் பெற்றேன் என்றால் 20.4.2022/21.4.2022 அன்று நடு இரவு 12.15 மணிக்கு வாங்கினேன்.

13) அ.சா.ஆ-12 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையில் நேரம் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

14) ராஜலட்சுமியின் ஒப்புதல் வாக்குமூலம் யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் தியாகராஜன் என்ற காவலர் மூலம் தட்டச்சு செய்யப்பட்டது. அந்த காவலர் தியாகராஜன் என்ற காவலரை இது சம்பந்தமாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

15) ராஜலட்சுமியின் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட இடத்திற்கும் பொருள் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இடத்திற்கும் இடையே சுமார் 6.கி.மீ. தூரம் இருக்கும்.

16) ராஜலட்சுமியின் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் எங்கு பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால் அருகில் இருந்த கடையில் எடுக்கப்பட்டது. அந்த கடையின் பெயர் தெரியாது.

17) அ.சா.ஆ.5 எங்கு பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட பிறகு காவல்நிலையத்தில் வைத்து எடுக்கப்பட்டது-

18) எனவே காவல்நிலையத்தில் வைத்துதான் சாட்சிகள் அ.சா.,ஆ.5ல் கையொப்பம் செய்தார்கள் என்றால் தவறு. காவல்நிலையம் போய் பிரிண்ட் எடுத்து வந்து கைப்பற்றிய இடத்தில் கையொப்பம் பெறப்பட்டது.

19) எதிரி ராஜலட்சுமி வீட்டிற்கும் கபிஸ்தலம் காவல்நிலையத்திற்கும் எத்தனை கி.மீ' தூரம் இருக்கும் என்றால் சுமார் 10 கி.மீ. தூரம் இருக்கும். அ.சா.ஆ-5ல் ராஜலட்சுமியின் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான்.

20) ராஜலட்சுமியின் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் எங்கள் காவல்நிலையத்தில் பிரிண்ட் எடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

21) நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ராஜலட்சுமியை கைது செய்யவில்லை என்றும் அவர் எந்த வித வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் அதன் பேரில் எந்த வித தடய பொருட்களும் கைப்பற்றவில்லை என்றும் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார்

செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

22) எதிரி ரமேஸின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் கையொப்பமே இல்லை என்றால் சரிதான்,. ரமேஸ் கையொப்பம் போட மறுத்துவிட்டார்.

23) அ.சா.ஆ.18 எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது.

24) அ.சா.1 சந்திரசேகரன் கொடுத்ததாக சொல்லப்படும் புகாரில் 2ம் எதிரியை பற்றிய எந்த தகவலும் இல்லை என்றால் சரிதான்.

25) சந்திரசேகரன் கொடுத்த வாக்குமூலத்தில் எதிரிகள் என் பக்கத்து நிலத்துகாரர்கள் அவர்களுக்கும் எனக்கும் பிரச்சினை என்று சொல்லி உள்ளார்களா என்றால் சொல்லி உள்ளார். அதுபோல் சந்திரசேகர் அவருடைய வாக்குமூலத்தில் அர்சுணனும் புஸ்பவள்ளியும் செல்போனில் அழைத்தார்கள் என்ற விபரமும் இல்லை என்றால் சரிதான்.

26) அ.சா.2 அர்சுணன் வாக்குமூலத்தில் என் மனைவி புஸ்பவள்ளியையும் எங்களையும் ஒன்றும் மிரட்டவேண்டாம் என்று சொன்னதற்கு என் மனைவியை ரமேஸ் அடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும் என் மனைவி மயக்கம் அடைந்துவிட்டதால் அவரை தூக்கி கொண்டுபோய்போட்டேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

27) புஸ்பவள்ளி அவருடைய வாக்குமூலத்தில் என்னை ரமேஸ் தள்ளிவிட்டார் என்றும் நான் கீழே எனக்கு நெஞ்சு அடைத்துவிட்டதாகவும் என்னை தூக்கிகொண்டுபோய் கொட்டகையில் வைத்து என் கணவர் தண்ணீர் கொடுத்துகொண்டு இருந்தார் என்றும் ரமேஸின் அம்மா வந்து அவரிடம் ஏன் சண்டை போடுகிறாய் என்று சொல்லி ரமேஸை அவருடைய வீட்டிற்கு அழைத்து சென்றார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

28) அ.சா.4 பிரபு இறந்த பிச்சையின் மருமகன் என்று அவர் வாக்குமூலத்தில் சொல்லவில்லை. பின்பு என் விசாரணையின் தெரிந்துகொண்டேன்.

29) நான் முன் விசாரணையின் சொன்னதுபோல் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றும் பிச்சையாவின் இறப்பிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

30) இந்த வழக்கின் சாட்சிகளின் வாக்குமூலங்கள் நீதிமன்றத்திற்கு 23.8.2022 அன்றுதான் அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான்.

31) நான் முறையாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல

32) எதிரி எந்த விதமான ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் அதன் பேரில் எந்த சான்று பொருட்களும் கைபற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்